https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அகநானூற்றில் தோற்றோர் நிலை

**ஜெ. தனலட்சுமி**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம்
கோயம்புத்தூர்-21

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியங்கள் பெரும்பாலும் வெற்றிபெற்ற அரசர்களை அதிகம் புகழ்வதைக் காணலாம். அவற்றில் தோல்வியுற்ற அரசர்களின் தேய்வினை முன்வைத்து வெற்றி பெற்ற அரசர்களின் புகழைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளன இலக்கியங்கள். தமிழ் இலக்கியங்களில் புறத்திணை என்பது அரசர்கள், போர்கள், வீரர்கள் பற்றிப் பேசுவதாக அமைந்து இறுதில் ஒரு போரின் முடிவினைச் சொல்கிறது. அக இலக்கியங்களில் பெரும்பாலும் போர் பற்றிய செய்திகள் இடம் பெறாவிட்டாலும் தலைவியானவள் தலைவனுடன் ஊடல் கொண்ட பொழுதுகளில் அல்லது தலைவன் தலைவியரிடையே பிரிவு ஏற்படும் நிலையில் அக இலக்கியக் கூற்றுகளில் பல்வேறு அரசர்களின் வெற்றிச் சிறப்பும், தோல்வியுற்ற அரசர்களின் தேய்வும் இடம்பெறுகிறது. இக்கட்டுரையானது அக இலக்கியமான அகநானூற்றில் இடம் பெறும் தோற்றோர் நிலைகளை ஆராயும் விதமாக அமைகின்றது.

## Abstract

Status of the defeated in the Akananuru Literatures often praise the victorious kings.Literatures contain stories of kings who have won by presenting the defeat. In Tamil literature, the eulogy of kings is usually sung, while the epilogue is a story about kings, wars, and warriors, and ultimately tells the conclusion of a war. Although most of the stories in the literature do not involve war, they do feature stories of the heroine having an affair with the leader or of the leader and the heroines falling out. This article examines the status of the lost in the Akananuru an internal literature.

**திறவுச் சொற்கள்**

போர் முரசு - ஆநிரைகள் - காவல் மரம் - திறை - பலி - தோற்றோர்.

## இலக்கணத்தில் தோற்றோர் நிலை

தோற்றவன், தன் படைக்கு ஏற்பட்ட இழப்பு, தான் பல நாட்களாக சேர்த்து வைத்திருந்த புகழுக்கு ஏற்பட்ட இழப்பு, ஆகியவற்றை நினைத்துக் கவலைப் படுதலே தோற்றவனின் இயல்பாகும். தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இடம் பெறும்,

> “வென்றோர் விளக்கமும்,தோற்றோர் தேய்வும்” (தொல்.பு.தி.பா.65:10)

என்னும் அடிகளின் வாயிலாக தோற்றவர்களின் நிலை, வென்றவர்களின் நிலைக்கு எதிர்ப்புரமாகப் பேசப்படுவதை அறிய முடிகிறது. இதுபோன்றே புறப்பொருள் வெண்பா மாலையில் இடம்பெறும் வஞ்சித் திணைத் துறைகளுள் ஒன்றான மழபுல வஞ்சித் துறையில்,

“கூடார்முனை கொள்ளைசாற்றி

**வீடுஅறக்கவர்ந்த**
**வினைபொழிந்தன்று"** *(புறப்.வெ.மாலை.50:14)*

என்னும் அடிகளின் வாயிலாக பகைநாட்டை வென்று அந்நாட்டு வளங்களைக் கொள்ளை யடிப்பதை மன்னர்களின் வீரச்செயலாகப் போற்றப்படுவதை அறிய முடிகிறது.

### உடைமைகளைத் தன்னகப்படுத்துதல்

தோற்றவர்களின் நிலையிலிருந்து பேசப்படும் முதன்மையான நிகழ்வுகளில் ஒன்று தோற்ற வருக்கு உடைமையான பொருள்களை வென்றவர் தன்னகப்படுத்துதல், அவற்றுள் பல வகைகள் உண்டு.

- போர் முரசுகளைத் தன்னகப்படுத்தல்.
- ஆநிரைகளைக் கைப்பற்றுதல்.
- காவல் மரத்தை அழித்தல்.
- திறை செலுத்துதல்.

### போர்முரசுகளைத் தன்னகப்படுத்துதல்

முரசு அழிக்கப்படுமானால் அம்முரசுக்குரிய வேந்தன் தோற்றவன் ஆகிறான். போர் முரசுகளை எதிரணியிடமிருந்து கவர்வதே, பகைவர்களின் திறனைக் குறைத்து வெற்றி பெற உதவும் என்று வெட்சித்திணை குறிப்பிடுகிறது.

செழியன் தன்னைத் தாக்கவந்த சேரல், செம்பியன், சினம் கெழு திதியன், போர் வல் யானைப் பொலம் பூண் எழினி, நார் அரி நறவின் எருமையூரன், இருங்கோ வேண்மாள், இயல் தேர்ப்பொருநன் என்ற எழுவரை வென்று அவர்கள் எழுவரின் போர்முரசுகளையும் வெண்கொற்றக் குடைகளையும் தன்னகப்படுத்திக் கொண்டான் என்பதை,

**"முரைசொடு வெண்குடை அகப்படுத்து**
**உரை செல**
**கொன்று களம்வேட்ட ஞான்றை**
**வென்றி கொள்வீரர் ஆர்ப்பினும்**
**பெரிதே!"** *(அகம்.பா.36:21-23)*

என்னும் அகநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகிறது. முரசினைத் தன்னகப்படுத்தும் செய்தி புறநானூற்றிலும் குறிப்பிடப் படுகின்றது. கல்லாடனார் செழியனுக்கு வேண்டுகோள் விடுக்கிறார், அதாவது செழியன், சேரன் மற்றும் சோழனின் இரு முரசுகளையும் தன்னகப்படுத்தும்போது, அவர்களது மனைவியர் கைமைக் கோலத்தில் மார்பில் அடித்துக்கொள்ளா வண்ணமும், கூந்தல் களையா வண்ணமும் பார்த்துக் கொள்ளவேண்டும் என்கிறார். இச்செய்தியினை,

**"பிணியுறு முரசம் கொண்ட காலை**
... **குவை இருங் கூந்தல் கொய்தல்**
**கண்டே"** *(புறம்.பா.25:7,14)*

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

### ஆநிரைகளைக் கைப்பற்றுதல்

பகை நாட்டு ஆநிரைகளைக் கைப்பற்றுபவர் கள் வெற்றியாளர்களாகவும், இழந்தவர்கள் தோல்வி பெற்றவனாகவும் கருதப்படுகிறது.

**பந்து புடைப்பன்ன பாணிப் பால் அடிச்**
**.........பகை தலைமணந்த பல் அதர்ச்**
**செலவே?** *(அகம்.105:10,17)*

என்னும் பாடலில் பல்வேல் எழினி என்னும் வீரன் ஒருவன் வேந்தனின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு பகை நாட்டின் ஆநிரைகளைக் கைப்பற்றி வந்தான் என்பதை அறிய முடிகிறது. அகநானூறு போலவே பதிற்றுப்பத்திலும் பெருஞ்சேரல் இரும் பொறை என்னும் மன்னன், தோட்டிமலை மன்னன் கழுவுள் என்பவனுடன் போர் புரிந்து தோட்டி மலைக் கோட்டையைக் கைப்பற்றினான். அப்போது காளைகள் மற்றும் கன்றுகளைக் கொண்ட பசுக்கூட்டங் களைப் பெருஞ்சேரல் இரும்பொறை கைப்பற்றிவந்தான். அதனால் தோட்டி மலையில் தயிர் கடையும் மத்துக் கயிறு ஆடவில்லை. அதனை நினைத்து கழுவுள் வருந்தினான் என்ற செய்தியை,

**கன்றுடை ஆயம் தரீஇப் புகல் சிறந்து**
............**ஆன் பயன் வாழ்நர் கழுவுள் தலை**
**மடங்க** *(பதி.பா.71:14,17)*

என்ற பாடல் குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது.

### காவல் மரத்தை அழித்தல்

காவல் மரம் என்பது ஒரு நாட்டின் அரசருக்கு அடையாளமாகக் கருதப்படும் மரமாகும். அந்தக் காவல் மரத்தை அழிப்பது மன்னனின் செல்வாக்கு, வலிமை, மரியாதை போன்றவை அழிப்பதற்குச் சமமாகும். இது வென்றவன், தோற்றவன் மீது செலுத்தும் ஆதிக்கத்தை எடுத்தியம்பு கிறது. திதியன் என்ற மன்னனுக்கும் அன்னி என்ற மன்னனுக்கும் இடையே நடைபெற்ற போரில், திதியனின் காவல் மரமாகிய புன்னை மரத்தை அன்னி வெட்டி வீழ்த்தினான் என்பதை,

**"அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்**
**தொன்னிலை முழுமதல் துமியப் பண்ணிப்**
**புன்னைக் குறைந்த ஞான்றை ….. "**
*(அகம்.பா.45:9-11)*

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைப்பதின் வழி அறியலாம். மேலும், இதே செய்தியினை அகநானூற்றின் 126,145 ஆவது பாடல்களிலும் காணமுடிகிறது. மேற்கண்ட செய்திகளின் வழி காவல் மரத்தை வீழ்த்துவது மன்னனை வீழ்த்துவத ற்குச் சமம் என்ற கருத்தை உணர முடிகிறது.

### திறை செலுத்துதல்

தோல்வியுற்ற அரசர்கள் தங்களைக் காத்துக் கொள்ள வெற்றி கொண்ட அரசனுக்குத் திறை செலுத்துவது ஒரு வழக்கமாக இருந்தது. வெற்றி முரசை முழக்குபவன் சேரலாதன். அவன் பகைவரின் காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்திய பிறகு இமயத்தில் தன் வில் சின்னத்தைப் பொறித்தான். அதனைக் கண்ட தோல்வியுற்ற அரசர்கள் பெருமதிப்புடைய அணிகலன்கள், பொன்னால் செய்த பெண் சிலை, வயிரம் போன்றவற்றைத் திறையாகத் தந்துள்ளனர். இச்செய்தியை,

**"நல் நகர் மரத்தை முற்றத்து ஒன்னார்**
**பணி திறை தந்த படுசால் நன்கலம்**
**பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்**
**ஒன்று வாய் நிறைக் குவிஇ, அன்று அவன்**
**நிலம் தினத் துறந்த நிதியத்து**
**அன்ன"** *(அகம்.பா.127:6-10)*

என்னும் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் திறை செலுத்துதல் குறித்த செய்திகள் அகநானூற்றின் 13,44,84,124 போன்ற பாடல்களிலும் இடம்பெறுகின்றன.

### உடல் பாகங்களைச் சிதைத்தல்

தோற்றவனின் உடல் பாகங்களைச் சிதைத்தல் என்பது வெற்றி பெற்ற அரசனுக்கு பெருமையைத் தேடித்தரும் செயலாகக் கருதப்பட்டது. போர்த் தொழில் கல்லாத எழினி என்ற ஒருவன் வேந்தன் எச்சரித்தும் கேளாமல் மத்தி என்பவனுடைய நாட்டிற்குப் போர்புரியச் சென்று அகப்பட்டுக் கொள்கிறான். மத்தி, எழினியின் பல்லைப் பிடுங்கி தனது கோட்டைக் கதவில் பதித்துக் கொள்கிறான். இச்செய்தியை,

**"கல்லா எழினி பல் எறிந்து அழுத்திய**
**வன்கண் கதவின் வெண்மணி வாயில்"**
*(அகம்.பா.211:13-14)*

என்னும் பாடல் அடிகளின் வழி அறிய முடிகிறது. இதேபோன்று பொறையன் என்னும் சேரவேந்தன் மூவன் என்பவனின் பல்லைப் பிடுங்கிக் கொண்டு சென்று தலைநகர் தொண்டிக் கோட்டையில் பதித்த வரலாற்றை,

**"மூவன் முழு வலி மள் எயிறு அழுத்திய**
**கதவின்**
**கானல் அம்தொண்டிப் பொருநன்,**
**வென்வேல்"** *(நற்.பா.18:3-4)*

என்ற நற்றிணைப் பாடல் வரிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

### பலியிடுதல்

சங்க காலத்தில் தெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கம் இருந்தது. போரில் தோற்ற ஒருவனை, வெற்றி பெற்றவன் போர்த் தெய்வத்திற்குப் பலி கொடுத்தான் என்பதை,

**"ஊட்டு அரு மரபின் அஞ்சு வரு பேஎய்க்**
**கூட்டு எதிர்கொண்ட வாய்மொழி மிஞிலி**
**புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும் பெயர்**
**வெள்ளத் தானை அதிகற் கொன்று உவந்து"**
*(அகம்.பா.142:10-13)*

என்ற பாடலில், மாந்தம் பொறையன் கடுங்கோ நன்னன் ஒரு சேர மன்னன் பெரும்படை கொண்டவன். அவனுடன் இருக்கும் மிஞிலி போர்த் தெய்வத்திடம் தோற்றவனை பலியிடுவதாக வாக்கு கொடுக்கிறான். பறவைகைகளை அதிகமாக வளர்த்துப் பாதுகாத்து வந்த அதிகனை வென்று, போர்த் தெய்வத்திற்குப் பலியிட்டான் என்பதை அறிய முடிகின்றது.

### முடிவுரை

- தோற்றவர்களிடமிருந்து பெறப்படும் பொருள் களையும், தோற்றவர்களுக்குக் கொடுக்கப் பட்ட தண்டனைகளையும், அடிப்படையாகக் கொண்டுதான் வெற்றி பெற்றவர்கள் புகழப் பட்டனர் என்பதை இக்கட்டுரை வெளிப் படுத்துகின்றது.
- உடல் பாகங்களைச் சிதைத்தல் மூலம் வெற்றியைக் கொண்டாடினர் என்ற செய்தியை அறிய முடிகின்றது.
- பல்வேறு விதமான திறைப் பொருட்கள் செலுத்தப் பட்டமை குறித்தும் அறிய முடிகின்றது.

### துணை நூற்பட்டியல்

1. தட்சிணாமூர்த்தி.அ (உ.ஆ), சங்க இலக்கியம் அகநானூறு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை,முதற்பதிப்பு – 2004.
2. முனைவர் ச. திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு– 2018.
3. துரைசாமிப்பிள்ளை.ஔவை (உ.ஆ), புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு – 2007.
4. துரைசாமிப்பிள்ளை.ஔவை (உ.ஆ), நற்றிணை மூலமும் உரையும், சைவ சாரதா பதிப்பகம்,சென்னை, முதற்பதிப்பு – 2003.
5. புலியூர்க்கேசிகன், புறப்பொருள் வெண்பா மாலை, சோழன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு -2024.
6. இராமசுப்ரமணியன்.வ.த, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு-2018.